**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**
**CC 230/2025**
LW 3 PW 3

| | | | |
|---|---|---|---|
| Name | மோகன் | Caste | |
| Father's/Husband Name | நமச்சிவாயம் | Calling | |
| Village | சேந்தங்குடி | Religion | |
| Taluk | | Age | 24/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969

(Central Act 44 of 1969) on the **17th day of February 2026**

Signature of witness.

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து சென்னையில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். கடந்த 14.04.2025 தேதியில் நானும் எனது நண்பர் 1ம் எதிரியும் அவரது இரு சக்கர வாகனத்தில் வேளாங்கண்ணியிலிருந்து சேந்தங்குடியிலிருக்கும் எங்களது வீட்டிற்கு சென்று கொண்டிருந்தோம். அப்போது மாலை சுமார் 4.30 மணியளவில் காரை நகர் அருகே சென்று கொண்டிருந்தபொழுது எதிரே இரு சக்கர வாகனத்தில் மூன்று பேர் வந்ததில் அவரது வாகனம் skit ஆகி வந்து நாங்கள் ஓட்டி சென்ற எங்கள் இரு சக்கர வாகனத்தின் மீது மோதியதில் நாங்கள் கீழே விழுந்து விட்டோம் விழுந்ததில் எனக்கு இடது புறத்தில் முழுமையாக அடிப்பட்டது.

2. எனக்கு மயக்கம் வந்து விட்டதால் சம்பவம் குறித்து வேறு எதுவும் தெரியாது. பின்னர் என்னை ஒரத்தூர் மருத்துவமனையில் அனுமதித்திருந்தார்கள். நினைவு திரும்பியதும் விபத்து குறித்து கேட்டு தெரிந்து கொண்டேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீசார் என்னை விசாரணை செய்த போது முதல் விசாரணையின் போது சொன்ன சங்கதிகளை தான் சொன்னேன்

என்றால் சரிதான்.   ஆஜர் 1ம் எதிரிக்கு வாகன ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/–ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,–
கீழ்வேளூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**

**CC 230/2025**

LW 2 PW 2

| Name | கோபு | Caste | |
|---|---|---|---|
| Father's/Husband Name | முத்துசாமி | Calling | |
| Village | திருத்துறைப்பூண்டி | Religion | |
| Taluk | | Age | 43/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969

(Central Act 44 of 1969) on the **17th day of February 2026**

Signature of witness.

**எதிரிகள் ஆஜர் .**

**முதல் விசாரணை**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ரயில்வேயில் வேலை செய்து வருகிறேன். கடந்த 14.04.2025 தேதியில் நானும் எனது நண்பர் குடும்பத்தாரும் பொய்கைநல்லூர் கோரக்கசித்தர் கோவிலுக்கு மாலை 4.00 மணியளவில் கிளம்பினோம். நான் எனது நண்பர் பாலமுருகனுடன் அவரது இரு சக்கர வாகனத்திலும், அவரது தம்பி கார்த்தி அவரது தம்பி மகன் பிரணவ் ஹர்சித், அவரது தம்பி நண்பர் தாமரைச்செல்வன் ஆகியோர் அவரது தம்பியின் இரு சக்கர வாகனத்திலும் சென்றோம்.

2. நாங்கள் திருத்துறைப்பூண்டியிலிருந்து பொய்கைநல்லூர் நோக்கி சென்று கொண்டிருந்தோம். வேளாங்கண்ணியிலிருந்து கண்டெய்னர் லாரி வேகமாக வந்து காரைநகர் புதுப்பாலம் அருகே வந்து கொண்டிருந்தது. அந்த சமயத்தில் இறந்து போன கார்த்தி ஓட்டி வந்த வாகனத்திற்கு நாங்கள் 200 மீட்டர் தொலைவில் வந்து கொண்டிருந்தோம். அவர்கள் காரை நகர் புதுப்பாலத்தை தாண்டியுள்ள நேரத்தில் நாங்கள் பாலத்தை அடைந்தோம். அப்போது லாரியை முந்தி வந்த இரு சக்கர வாகனம் அ.சா. 1 ன் தம்பியின் இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் அ.சா.1 ன் தம்பி மற்றும் தாமரைச்செல்வன் லாரியில் விழுந்தார்கள். தாமரைச்செல்வன் சம்பவ இடத்திலேயே இறந்து

விட்டார். அ.சா. 1ன் தம்பி ஆம்புலன்ஸில் செல்லும் வழியில் இறந்து விட்டார். இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த ஆஜர் 1ம் எதிரியை சம்பவ இடத்தில் பார்த்தேன்.

3. ஆஜர் 2ம் எதிரி ரதீஷ் லாரியின் ஓட்டுநர். அவரையும் சம்பவ இடத்தில் பார்த்தேன். இறந்து போன கார்த்தியின் மகன் பிரணவ்க்கு விபத்தில் ஒரு புறம் தேய்ந்து சிராய்ப்பு காயங்கள் ஏற்பட்டது. இரு சக்கர வாகனத்தில் வந்த 1ம் எதிரிக்கு விபத்தில் இரண்டு காலிலும் அடிப்பட்டிருந்தது. அவர் பின்னால் அமர்ந்து வந்த மோகன் என்பவருக்கு அவரது வலதுபுற முகத்தில் அடிப்பட்டிருந்தது.

4. அ.சா.1 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வந்ததும் அவர்களை ஒரத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். விபத்தை பார்த்தவுடன் நான் பதட்டம் ஆகிவிட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** புகார் அளித்தபோது விசாரித்த பின்னிட்டு, போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, புகார் அளித்த பின்னிட்டு மருத்துவமனையிலிருந்த என்னை காவல் நிலையம் வரச்சொல்லி விசாரித்தார்கள். அ.சா. 1 மற்றும் இறந்து போன கார்த்தி எனக்கு உறவினர்கள் என்றால் சரியல்ல, நண்பர்கள். சம்பவ இடத்திலிருந்து சுமார் 100 மீ தொலைவில் மேற்கு புறமாக சாலை வளைந்து செல்லும் என்றால் சரிதான். விபத்து பகுதி நேரான ரோடு ஆகும். விபத்துக்கு அருகாமையில் வீடு கடைகள் மற்றும் பெட்ரோல் பங்கு இருக்கிறது என்றால் சரிதான்.

2. விபத்து நடந்த பின்னிட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரியல்ல, நாங்கள் செல்லும்போது விபத்தை நடந்ததை பார்த்தேன். நாங்கள் சென்றபோது அதே சமயத்தில் அங்கு மக்களும் கூட்டம் கூடினர் என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதி சாலையின் மைய பகுதி என்றால் சரிதான். பாலம் சாலையை விட குறுகிய பகுதி என்றால் சரிதான். நான் சொன்ன தூரத்தில் என்னால் விபத்தை நேரிடையாக பார்த்திருக்க முடியாது என்றால் சரியல்ல, அ.சா.1 இரு சக்கர வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்திருந்தபொழுது அ.சா.1 சத்தம் போட்டவுடன் நான் பார்த்தேன்.

3. வாகனத்தில் பின்னால் அமர்ந்திருக்கும் பொழுது முன்னால் என்ன நடந்தது என்பதை நேரடியாக பார்க்கமுடியாது என்றால் சரியல்ல. இறந்து போன நபர் சாலை விதிகளை பின்பற்றாமல் இரு சக்கர

வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. இந்த விபத்து எதிரிகளின் அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவினால் ஏற்படவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இந்த விபத்து வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

4. விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படும் சாலை மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள சாலை என்றாலும், போக்குவரத்து மிகுந்த இடம் என்றாலும் சரிதான். ஈசி ஆர் ரோடு என்பதால் எப்போதும் சாலையில் போக்குவரத்து வந்து சென்று கொண்டிருக்கும். அ.சா. 1 எனது நண்பர் என்பதால்சம்பவத்தை பார்க்காமல் பார்த்ததாக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/–ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,–
கீழ்வேளூர்.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**KILVELUR**

**CC 230/2025**

LW 1 PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | பாலமுருகன் | Caste | |
| Father's/Husband Name | நடராஜன் | Calling | |
| Village | திருத்துறைப்பூண்டி | Religion | |
| Taluk | | Age | 45/2026 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969

(Central Act 44 of 1969) on the **17th day of February 2026**

Signature of witness.

**எதிரி ஆஜர் .**

**முதல் விசாரணை**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வெல்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 14.04.2025 தேதியில் நானும் எங்கள் குடும்பத்தாரும் பொய்கைநல்லூர் கோரக்கசித்தர் கோவிலுக்கு மாலை 5.30 மணியளவில் சென்றோம் நானும் எனது நண்பர் கோபுவும், எனது இரு சக்கர வாகனத்திலும், எனது தம்பி கார்த்தி அவரது மகன் பிரணவ் ஹர்சித், அவரது நண்பர் தாமரைச்செல்வன் ஆகியோர் எனது தம்பியின் இரு சக்கர வாகனத்திலும் சென்றோம்.

2. நாங்கள் திருத்துறைப்பூண்டியிலிருந்து பொய்கைநல்லூர் நோக்கி சென்று கொண்டிருந்தோம். வேளாங்கண்ணியிலிருந்து பாரத் பென்ஸ் கண்டெய்னர் லாரி TN 37 6455 என்ற எண் கொண்ட வாகனம் வேகமாக வந்து காரைநகர் புதுப்பாலம் அருகே வந்து கொண்டிருந்தது. அப்போது லாரியை முந்தி வந்த yamaha Ray ( Scooty type ) வாகனம் எனது தம்பியின் இரு சக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. விபத்தில் கீழே விழுந்த எனது தம்பி மற்றும் தாமரைச்செல்வன் மீது லாரி ஏறியதில் தாமரைச்செல்வன் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார் – எனது தம்பி ஆம்புலன்ஸில் செல்லும் வழியில் இறந்து விட்டார். இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்தவர்

மனோஜ்பாபு, என்பவர் ஆஜர் 1ம் எதிரியை சம்பவ இடத்தில் பார்த்தேன்.

3. ஆஜர் 2ம் எதிரி ரதீஷ்குமார் லாரியின் ஓட்டுநர். அவரையும் சம்பவ இடத்தில் பார்த்தேன். எனது தம்பி மகன் பிரணவ் ஹர்சித்துக்கு விபத்தில் சிறு காயங்கள் ஏற்பட்டது. இரு சக்கர வாகனத்தில் வந்த 1ம் எதிரிக்கு விபத்தில் இடது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அவர் பின்னால் அமர்ந்து வந்த மோகன் என்பவருக்கு இடது கண்ணில் அடிப்பட்டிருந்தது.

4. ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொல்லி ஆம்புலன்ஸ் வந்ததும் அவர்களை ஒரத்தூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் அன்றைய தினம் காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா. ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. புகார் மனுவை நான் தான் எழுதினேன். விபத்து எப்போது நடந்தது என்றாலும் நான் காவல் நிலையம் எப்போது சென்றேன் என்றாலும் விபத்துமாலை 5.30 மணியளவில் ஏற்பட்டது. நான் காவல் நிலையம் இரவு 8.30 மணியளவில் சென்றேன். விபத்து ஏற்பட்ட வாகனத்தை ஓட்டி சென்ற கார்த்தி வாகனத்திற்கும் எனது வாகனத்திற்கும் இடையே எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 500 மீ தொலைவிருக்கும். விபத்து நடந்ததாக சொல்லப்படும் சாலை தென்வடல் சாலை என்றால் சரிதான். அந்த சாலை வளைந்து செல்லும் சாலை என்றால் சரியல்ல, ஈசிஆர் ரோடு நேரான ரோடு ஆகும்.

2. லாரி ரோட்டின் நடுவே வந்து கொண்டிருந்தது என்றால் சரிதான். எனது தம்பி ரோட்டின் இடது புறம் இரு சக்கர வாகனத்தை ஓட்டிச் சென்றார். எனது தம்பி இரு சக்கர வாகனத்தில் மூன்று பேருடன் பயணித்தார் என்றால் சரிதான். எனது தம்பியின் மகனுக்கு 5 வயது ஆகும். 1ம் எதிரி ஓட்டி வந்த இரு சக்கர வாகனம் லாரியின் பின்னால் வந்தது என்றால் பின்னாலிருந்து முந்தி வந்து விபத்து ஏற்படுத்தியது. எனது தம்பிக்கு வாகன ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல, ஓட்டுநர் உரிமம் உள்ளது. எனது தம்பி அவரது இரு சக்கர வாகனத்தை அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி லாரியின் பக்கவாட்டில் மோதி விபத்து ஏற்படுத்தி பின்னர் எதிரில் வந்த 1ம் எதிரியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

3. இந்த விபத்து எதிரிகளின் அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவினால் ஏற்படவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் இந்த

விபத்து வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. சாட்சி சொல்ல வந்திருக்கும் பட்டியல் சாட்சி 2 மற்றும் 3 உறவினர்கள் என்றால் சரியல்ல நண்பர்கள். விபத்து ஏற்பட்டதாக சொல்லப்படும் சாலை மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள சாலை என்றாலும், போக்குவரத்து மிகுந்த இடம் என்றாலும் சரிதான். 1ம் எதிரி அஜாக்கிரதையாக ஓட்டி வந்திருந்தால் தனக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியிருக்க மாட்டார் என்றால் சரியல்ல.

4.எதிரிகள் நான் சொல்வது போல் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டியிருந்தால் எனது தம்பியின் குழந்தைக்கும் பாதிப்பு ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல, இந்த வழக்கில் எனது தம்பியின் இறப்பிற்கு வாகன நஷ்ட ஈடு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நஷ்ட ஈடு பெற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

ஒம்/–ர.மீனாட்சி எம்.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,–
கீழ்வேளூர்.